12th February 1959]

SRI M. JAGANNATHAN : These words are not at all offensive.

MR. SPEAKER : The point here is that the hon. Member is wounding the feeling of some others.

SRI M. JAGANNATHAN : Sir, the words are quite parliamentary, and I do not see any point in objecting to the use of these words.

MR. SPEAKER : Anyhow, in the interests of harmony, the hon. Member may use some less objectionable words.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member has put the question glibly. It does not deserve an answer.

SRI S. NAGARAJA MONIGAR : நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பது பல வருஷங்களாகவே எண்ணத்திலேயே இருந்து வருவதால் அது இன்னும் உலாவிக்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வது எந்த நோக்கத்தைக் கொண்டு என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member is giving information.

SRI V. SUBBIAH : இந்த நில உடமைக்கு வரம்பு கட்டும்போது கூட்டுக் குடும்பமாக உள்ளவர்களின் நிலத்திற்குத் தரத்திற்குத் தகுந்த படி காம்பன்சேஷன் கொடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு முன்னதாகத் தெரி விக்கப்படும்போது யோசனை சொல்லலாம்.

SRI N. K. PALANISAMI : முன்பே சர்க்கார் future ceiling கொண்டு வருவதாகச் சொன்னார்கள். இப்பொழுது existing holdings கொண்டு வருவது பரிசீலனையில் இருக்கிறதா ? இப்பொழுது சர்க்கார் கொள்கையை மாற்றிக் கொள்ள என்ன காரணம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வருஷம் பரவலான மசோதா கொண்டு வர இருப்பதில்லை.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த நிலப் பிரச்னை விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொரு மந்திரிகளும் எவ்வளவு எவ் வளவு நஞ்சை, புஞ்சை நிலங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை வெளி யிட மந்திரி சபை முன் வருமா ?

Mr. SPEAKER : தனிக் கேள்வி கேளுங்கள். பதில் சொல்லுவார்கள்.

*Untouchability*

*279 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புக்காக சினிமா படமானது மத்திய சர்க்கா ரால் தயாரிக்கப்பட்டு சென்னை சர்க்காருக்கு அனுப்புவதற்கானத் திட்டம் ஏதாவது பரிசீலனையில் இருக்கின்றதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றுவரின், அவ்விவரங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : " ஒன்றே குலம் " என்ற படத்தை வாங்குவதற்கு ஆன தொகையை தீண்டாமை ஒழிப்பு நிதியிலிருந்து கொடுக்கும்படி நமது சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : பதிலிலேயே சொல்லி இருக்கிறேன். அது பரிசீலனையில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது இயலாத காரியம்.

*Homoeopathy system of medicine*

* 280 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government intend to recognize and encourage homoeopathy; and

(*b*) the help this Government intend to give to Siddha (சித்த வைத்தியம்) method of treatment?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The question of recognizing the homoeopathis system of medicine is under the consideration of Government.

(*b*) The Sidha System is taught in the Government College of Integrated Medicine and treatment under that system is also being given in the Hospital of Integrated Medicine.

SRI K. SATTANATHA KARAYALAR : சித்த வைத்தியம் செய்பவர்களை ரிஜிஸ்டர் செய்ய ஒரு லிஸ்ட் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த அடிப்படையில் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சித்த வைத்தியம் மாத்திரம் அல்ல, உள்நாட்டு முறையிலே வைத்தியம் செய்கிறவர்கள் சில வருஷகாலத்திற்குப் பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளுக்கு உட்பட்டிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது.

SRI N. K. PALANISAMI : ஹோமியோபதி வைத்தியப் பயிற்சிக்குத் தனியாக ஒரு கல்லூரி ஏற்படுத்த சர்க்காரில் ஆலோசனை இருக்கிறதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப் பற்றி சென்னையில் ஹோமியோபதி அசோசியேஷன், ஒரு காலேஜ் ஆரம்பிக்க யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்தால் அரசாங்கம் அதைக் கவனித்து என்ன செய்யமுடியும் என்று தீர்மானிக்கும்.